# வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சக்திக் கம்பனி – 2017/2018

---

வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சக்திக் கம்பனியின் ("கம்பனி") 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டது. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்கையில் நான் பொதுத்துறையிலுள்ள பட்டயக்கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை பெற்றுக்கொண்டேன்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயங்களை சுட்டிக்காட்டல்**

முன்னைய நிதி ஆண்டின் போது சம்பூர் நிலக்கரி மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது என குறிப்பு 4 இல் கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது. இது, குறிப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளவாறான ஏனைய விடயங்களுடன் சேர்த்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவிற்கமைய கம்பனி தொடர்ந்தியங்குவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தும் முக்கியத்துவமான நிச்சயமற்ற தன்மையின் உள்ளதன்மையினை சுட்டிக்காட்டுகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் எனது அபிப்பிராயமானது முனைப்பழியுள்ளதாக்கப்படவில்லை.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில்,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும் மற்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

-

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 22,008,999 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 351,157,542 வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றை விளைவித்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 329,148,543 ஆன பற்றாக்குறைவொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது ரூபா 343,915,606 தொகையான மூலதன நடைமுறை வேலை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் இது நிதிசார் விளைவுகளின் இந்தப் பின்னடைவிற்கு பிரதான காரணமாகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனியின் பிரதான செயற்பாடானது இலங்கை மின்சார சபையின் தேசிய மின்சார விநியோகத்திற்கு (National Grid) மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்குவதாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச தீர்மானத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்லிருந்து சம்பூர் நிலக்கரி மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கைகளினை கம்பனி கைவிட்டிருந்தது. ரூபா 343,915,606 தொகையான நடைமுறை வேலைக்காக முன்னிலிருந்து ஏற்படுத்தப்பட்ட முன்னைய செலவினங்கள் நட்டக்கழிவு செய்யப்பட்டிருந்ததுடன் விரிவான வருமானக் கூற்றிலிருந்து பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செய்முறை

#### தாமதமாக்கப்பட்ட செயற்திட்டங்கள்

சங்கிலி இணைப்பு வேலியின் நிர்மாணமானது 2015 ஆகஸ்ட் 12 இல் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 48,282,120 ஆகவிருந்தது. ஒப்பந்த காலப்பகுதியானது 06 மாதங்களாகவிருந்தது. கம்பனியானது வேலைப் பூர்த்தி செய்வதற்கு 2018 மே 31 வரை 11 கால நீடிப்புக்களை கொடுத்திருந்த போதும், 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் 83 சதவீதமாகவிருந்தது. கம்பனியின் பிரகாரம், நிச்சயமற்ற தன்மை, செயற்திட்டத் களத்திலுள்ள மாற்றங்கள், பாரிய பிழைகள் போன்றவைகளால் பல தடவைகளில் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டமையால் தாமதத்தை ஏற்படுத்தியது. மேலும், பல நேரங்களில் வேலியானது யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்தமையால் அந்த வேலியானது யானைகளிலிருந்து பாதுகாப்பதாற்கு வலுவற்றதாகவிருந்ததுடன் இது தொடர்பில் மேலதிக கிரயம் ஏற்படக்கூடும்.

## 5.2 ஆண்டறிக்கை

------------------------

2016/2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.